**செய்தி வெளியீடு எண் : 03** **நாள்: 12.01.2024**

**ஆளுநர் விருது – 2023 'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' ஆகிய பிரிவுகளின் கீழ் விருதுகள் வென்றவர்களின் விவரங்களை தமிழ்நாடு ஆளுநர் மாளிகை அறிவிக்கிறது**

ஆளுநர் விருது – 2023 'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' ஆகிய பிரிவுகளின் கீழ் விருதுகள் வென்றவர்களின் விவரங்களை தமிழ்நாடு ஆளுநர் மாளிகை அறிவிக்கிறது. கடந்த ஆண்டு 2023 ஜூன் மாதம் 04 ஆம் தேதி அறிவிப்பினை வெளியிட்டார். இந்த இரு விருதுகளும் சமூக சேவை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஈடுப்பட்டுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் தன்னலமற்ற சேவையை அங்கீகரித்து அவர்களை பாராட்டி ஊக்குவிப்பதற்காக ஆளுநர் மாளிகை சார்பாக அறிவிக்கப்பட்டது.

இவ்விருதுகளுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தேர்வு குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு தேர்வுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், 'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' ஆகிய இரு பிரிவுகளின் கீழ் விருதுகள் வென்றவர்களின் விவரங்களை தமிழ்நாடு ஆளுநர் மாளிகை பின்வருமாறு அறிவிக்கிறது.

| பிரிவு | நிறுவனம் | தனிநபர் |
|---|---|---|
| **'சமூக சேவை'** | 'ஊரக வளர்ச்சி அமைப்பு' (Rural Development Organization) (நீலகிரி மாவட்டம்) | திரு.ஜி.மதன் மோகன் (திருவண்ணாமலை மாவட்டம்), திரு.எம்.குபேந்திரன் (சென்னை மாவட்டம்), திரு.என்.ரஞ்சித் குமார் (தேனி மாவட்டம்) |
| **'சுற்றுச்சூழல் பாதுகாப்பு'** | 'பசுமை அமைதி காதலன்' (Green Peace Lover) - (மதுரை மாவட்டம்) | திரு.ஜி.தாமோதரன் (தர்மபுரி மாவட்டம்), திரு.சி.முத்துகிருஷ்ணன் (திருநெல்வேலி மாவட்டம்), திரு.வி.தலைமலை (விருதுநகர் மாவட்டம்) |

'சமூக சேவை' (நிறுவனம்) பிரிவில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள **'ஊரக வளர்ச்சி அமைப்பு' (Rural Development Organization)** சமூக சேவைக்கான விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்கு ரூ.5 லட்சம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆளுநர் மாளிகையின் சார்பாக வழங்கப்படும். இந்நிறுவனம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கல்வி, சுகாதாரம், பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி சேவை செய்து வருவதன் அடிப்படையில் இந்நிறுவனத்திற்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

'சமூக சேவை' (தனிநபர்கள்) பிரிவில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த **திரு.ஜி.மதன் மோகன்**, சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த **திரு.எம்.குபேந்திரன்** மற்றும் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த **திரு.என்.ரஞ்சித்குமார்** ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தலா ரூ.2 லட்சம் மற்றும் பாராட்டு சான்றிதழ் ஆளுநர் மாளிகையின் சார்பாக வழங்கப்படும். திரு.ஜி.மதன் மோகன், கல்வி, நீர் மேலாண்மை, பெண்களுக்கு அதிகாரமளித்தல் போன்றவற்றில் பெரும் பங்களிப்பை அளித்துள்ளார். திரு.எம்.குபேந்திரன், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுவதிலும், தனது ஆட்டோரிக்க்ஷாவை பயன்படுத்தி மரம் நடுதல் மற்றும் அதனை ஊக்குவித்தல் தொடர்பான செய்திகளை வீடுதோறும் கொண்டு சேர்த்தல் மற்றும் அவரது பயணிகளிடையே புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல் போன்ற முயற்சிகளுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. திரு.என்.ரஞ்சித் குமார் பல துறைகளில் பங்களிப்பை அளித்துள்ளார். அறிவுசார் குறைபாடுகள் உள்ள நபர்களை அடையாளம் கண்டு அவர்களை பாதுகாக்கப்பட்ட பராமரிப்பு மையங்களில் கொண்டு சேர்ப்பது, இறந்தவர்களை தகனம் செய்தல், தடுப்பூசி குறித்த விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு சேர்த்தல் போன்ற சேவைகளை கோவிட்-19 பெருந்தொற்று காலங்களின்போது மேற்கொண்டுள்ளார். போதைக்கு அடிமையாதலை தடுத்தல் மற்றும் குழந்தை திருமணத்தை தடுத்தல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளிலும் தனது பங்களிப்பை நல்கியுள்ளார்.

'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' (நிறுவனம்) பிரிவில் **'பசுமை அமைதி காதலன்' (Green Peace Lover)** மதுரையை சேர்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் விருதுக்கு

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்கு ரூ.5 லட்சம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆளுநர் மாளிகையின் சார்பாக வழங்கப்படும். இந்நிறுவனம் மாணவர்கள் மற்றும் இளைஞர்களை உள்ளடக்கிய குழுக்களை கொண்டு பசுமைச்சூழலை அதிகரிக்க தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சுற்றுச்சூழல் தூய்மை, பசுமை மற்றும் பூர்வீக தாவரங்கள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே சேர்ப்பதை நோக்கமாக கொண்டு செயல்படும் இந்நிறுவனத்திற்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' (தனிநபர்கள்) பிரிவில் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த **திரு.ஜி.தாமோதரன்**, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த **திரு.சி.முத்துகிருஷ்ணன்** மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த **திரு.வி.தலைமலை** ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தலா ரூ.2 லட்சம் மற்றும் பாராட்டு சான்றிதழ் ஆளுநர் மாளிகையின் சார்பாக வழங்கப்படும். ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வரும் திரு.ஜி.தாமோதரன், கடந்த 17 ஆண்டுகளாக நீர்நிலைகளை தூய்மைப்படுத்துதல், மரம் வளர்ப்பு மற்றும் இயற்கை விவசாயத் தொழில்நுட்ப பணிகளில் ஈடுபட்டு வருகிறார். திரு.சி.முத்துகிருஷ்ணன் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நீர்நிலைகளை தூய்மைப்படுத்துதல் மற்றும் நாட்டு மரங்களை நட்டு அவற்றை பாதுகாக்கும் பணியில் தொடர்ந்து ஈடுப்பட்டு வருகிறார். திரு.வி.தலைமலை அவர்கள் பசுமையை நிலைநிறுத்துவதற்கு நாட்டு மரங்களை நட்டு பராமரித்து வருவதுடன், ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளை பலருக்கு வழங்கி இளைஞர்களிடையே மரம் நடும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்.

மேற்படி 'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' ஆகிய இரு பிரிவுகளின் கீழ் விருதுகள் அறிவிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு 26.01.2024 அன்று சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெறும் குடியரசு தின வரவேற்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் விருதுகள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

---

**ஆளுநர் மாளிகை, சென்னை-22** **வெளியீடு :-**

**நாள்: 12.01.2024** **மக்கள் தொடர்பு அலுவலகம்**